සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

තෙවන වාර පරීක්ෂණය
மூன்றாம் தவணை பரீட்சை - 2026
Third Term Test

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 13 | විෂයය / பாடம் / Subject: இஸ்லாமிய நாகரிகம் | පත්‍රය / வினாத்தாள் / Paper: II | පැය / மணித்தியாலம் / Hours: 2 |

**அறிவுறுத்தல்கள்:**
* பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**01.** (i) சமயம், நாகரீகம், பண்பாடு ஆகிய சொற்பிரயோகங்களை சுருக்கமாக விளக்குக

(ii) இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படைகளுக்கும் அதன் நாகரீகப் பெறுமானங்களுக்கும் இடையில் உள்ள தொடர்புகள் நான்கைக் குறிப்பிடுக

(iii) வஹியின் முக்கியத்துவங்கள் நான்கினை விபரிக்குக.

(iv) மறுமையுடன் தொடர்பான படிமுறை அம்சங்களுள் நான்கைக் குறிப்பிட்டு அவற்றை விபரிக்குக.

(v) தீன், 'ரீஆ ஆகிய இரு பதங்களையும் தெளிவுபடுத்தி இரண்டுக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகள் இரண்டை விளக்குக.

(5× 4 = 20 )

**02.** (i) அபூபக்கர் (ரழி) அவர்களது காலத்தில் அல்குர்ஆன் நூலுருப்படுத்தப்பட்டமையை அதன் பின்னணிக் காரணிகளுடன் விவரிக்குக.

(ii) அல்குர்ஆன் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருவதற்கு ஏதுவான காரணிகள் நான்கினை சுருக்கமாக விளக்குக.

(iii) மனிதர்களிடையே காணப்படும் பல்லினத்தன்மைக்கு மத்தியில் சமத்துவம் பேணுவதற்கான இஸ்லாம் முன்வைக்கும் கோட்பாடுகள் நான்கை விளக்குக.

(iv) தப்ஸீர் எனும் பதத்தின் மொழிக் கருத்தைக் குறிப்பிட்டு அது பற்றிய அறிஞர்கள் மூவரின் வரைவிலக்கணங்களைக் குறிப்பிடுக.

(v) அல்இஸ்திஹ்ஸானின் இரு வகைகளையும் உதாரணங்களுடன் விளக்குக.

(5× 4 = 20 )

**03.** (i) அரேபிய முஸ்லிம்கள் மருத்துவத்துறையில் ஈடுபடுவதற்கு நபியவர்களின் போதனைகள் எவ்வாறு ஆர்வமூட்டின என்பதை விளக்குக

(ii) ஜாஹிலிய்யாக் காலத்தில் நிலவிய சமய, சமூக, நிர்வாக ஒழுங்கு முறைகளை விளக்குக

(iii) அகீதா ரீதியான பிழவுகளால் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட பாதகங்களைப் பட்டியலிடுக.

(iv) அரபு எழுத்தணிக் கலையை அடிப்படையாக வைத்து இஸ்லாம் மனிதனது கலை ரசனையை எவ்வாறு நெறிப்படுத்துகிறது என்பதை விளக்குக.

(v) கருத்து வேறுபாடுகளின் போது பேணவேண்டிய ஒழுக்கங்கள் நான்கினை விளக்குக.

(5× 4 = 20 )

## பகுதி II

**04.** (i) கப்பல் கட்டும் துறையில் முஸ்லிம்கள் ஈடுபடுவதற்கு ஏதுவாய் அமைந்த பின்னணியையும் அத்துறையில் அவர்களது பங்களிப்பையும் ஆராய்க.

(ii) இராட்சியப் பரிபாலணத்தை முல்கியத்திலிருந்து கிலாபத் முறைக்குக் கொண்டுவருவதறகாக கலீப உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவரகள் மேற்கொணட முயற்சிகளை மதிப்பீடு செய்க.

(10× 2 = 20 )

**05.** (i) பிக்ஹ் ஒரு தனிக்கலையாக தோன்றுவதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகளை ஆராய்க

(ii) ஹதீஸ் ஒரு தனிக்கலையாக வளர்வதற்கு ஏதுவாய் அமைந்த காரணிகளைத் தெளிவுபடுத்துக.

(10× 2 = 20 )

**06.** (i) எமது முன்னோர்கள் நம் தேசத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்களை முன்மாதிரியாகக் கொண்டு இன்றய காலகட்டத்தில் நாம் தேசத்திற்காக எவ்வாறு பங்காற்ற முடியும் என்பதை விளக்குக.

(ii) அப்பாஸியர் காலத்தில் புவைஹிதிகள் எவ்வாறு தம்மைப் பலப்படுத்தி ஒரு சிற்றரசைத் தோற்றுவித்தார்கள் என்பதை ஆராய்க.

(10× 2 = 20 )

**07.** (i) திரைசேரியை (பைதுல்மால்) கையாண்டதில் கலீபாக்கள், மற்றும் உமையா அப்பாஸிய ஆட்சியாளர்களுக்கிடையில் இருந்த ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்புநோக்குக

(ii) ஸுன்னாவைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட கலைகளை விளக்குக.

(10× 2 = 20 )

**08.** (i) "அல்குர்ஆனுக்கு அடுத்த மூலாதாரம் என்றவகையில் ஸஹீஹுல் புகாரியின் முக்கியத்துவத்தை விபரிக்குக.

(ii) பெண்ணுரிமை தொடர்பில் ஐரோப்பிய நாகரிகத்திற்கும் ' இஸ்லாமிய நாகரிகத்திற்கும் இடையில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

(10× 2 = 20 )